Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

2011

# புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களுக்குச் சொல்லப்பட்டத் **தீர்க்கதரிசனங்களும்,** வாக்குத்தத்தங்களும்

உங்கள் வாழ்க்கையில் **நிறைவேற** வேண்டுமானால், உங்களுடைய பங்கும்
அதில் உண்டு என்பதை உணர்ந்து நீங்கள் அதைச் செய்ய வேண்டும்.

முதலாவது காரியம், **கர்த்தர்தான்** தம்முடைய தீர்க்கதரிசியைக்கொண்டு **பேசினார்,**
அது மனுஷனுடைய வார்த்தையல்ல என்று

நீங்கள் **விசுவாசிக்க** வேண்டும்.

இப்பொழுது தியானித்துக்கொண்டிருப்பது . .

வேத ஆராய்ச்சி பாடங்கள்

ஜெபம்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்

மாலை - 6.30 மணி முதல் 8.00 மணி வரை

இடம்: ஏ-4, டேஜூ ப்ளாஸா, 2, தெற்கு அவென்யூ,

ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை,

சென்னை - 600 015.

( சைதாப்பேட்டை கோர்ட் அருகில் )



Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 4 ISSUE . 6 தனிப்பிரதி ரூ 20/= ஜனவரி 2011

# ஒளி எக்காளம்



முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்..

– மத்தேயு 6:33



# முதலாவது தேவனுடைய ராஜ்யம்

**– நிஜா கென்னடி**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்! இந்த 2011-ம் ஆண்டு உங்களுக்கு ஆசீர்வாதமான ஆண்டாக இருக்கும்படியாக கர்த்தர்தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் வழி நடத்துவாராக.

இந்த இதழில், ''தேவனுடைய ராஜ்யம்'' குறித்து உங்களோடு தியானிக்க வாஞ்சிக்கிறேன். கர்த்தர்தாமே தமது வேதத்தின் வார்த்தைகள் மூலமாக நம்மோடு இடைபடுவாராக.

இந்த உலகமானது, பாவங்கள் நிறைந்ததாகும். பாவம், மனுஷனை மரணத்தில் கொண்டுபோய் விடுகிறது. மனுஷனாய் பிறக்கிற எவராலும் பாவத்தை மேற்கொள்ள முடியவில்லை. நம்மை உண்டாக்கின தேவன், அவருடைய பிள்ளைகளாகிய நாம், இந்த பூமியிலே பாவத்தை அவர்மூலமாக மேற்கொண்டு வெற்றிகரமான ஒரு வாழ்க்கையை வாழ விரும்புகிறார். அந்த வெற்றிகரமான வாழ்க்கையே தேவனுடைய ராஜ்யமாகும். தேவனுடைய ராஜ்யம் எனப்படுவது, நாம் உள்ளார்ந்த மனுஷனால் வாழும் வாழ்க்கையாகும். தொடர்ந்து இந்த காரியத்தை வேதத்தின் வார்த்தைகள் மூலம் பார்ப்போம். வேதத்திலே பரலோகராஜ்யம் என்றும், தேவனுடைய ராஜ்யம் என்றும் குறிப்பிடுவது ஒன்றே. பரலோகம் அல்லது மோட்சம் என்பது, நாம் இந்த உலகை விட்டு கடந்து சென்றபின் போகும் இடமாகும்.

**தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே** (லூக்கா *17:21*). இயேசு கிறிஸ்துவே உண்மையான தேவன் என்று அறிந்து கொண்டு அவரை விசுவாசித்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிற ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் (யோவான் *1:12*). இதுவரை செய்த பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் ஒவ்வொன்றாக கூறி அறிக்கை செய்து, அவருடைய இரத்தத்தினால் கழுவப்படும்போது, மன்னிப்பை பெற்றுக் கொள்கிறார்கள். மறுபடியும் பிறக்கிறார்கள். அப்பொழுது அவர்களுக்குள் தேவனுடைய ராஜ்யம் வந்து விடுகிறது. மனிதர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆவியானவர் செயல்பட ஆரம்பிக்கும்போதும், தேவனுக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு தொடங்கும்போதும் தேவனுடைய ராஜ்யம் அவர்களுக்குள் வந்துவிடுகிறது. (ரோமர் *8:14*). நம் உள்ளார்ந்த மனிதனை, கர்த்தர் ஆளுகை செய்ய நாம் ஒப்புக் கொடுக்கவேண்டும். பின் அவருடைய சித்தத்தை அறிந்து, அவருடைய வழிநடத்துதலின்படி நாம் வாழவேண்டும்.

யோவானின் முதல் பிரசங்கத்தில், **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது** என்று பிரசங்கித்தான் (மத்தேயு*3:2*). பாவத்தை வெறுத்து அதற்கு விலகி இயேசுகிறிஸ்து காட்டும் வழியில் நடக்கத் தீர்மானிப்பதுதான் மனந்திரும்புதலாகும். உண்மையான மனந்திரும்பியதன் அடையாளம் என்னவென்றால், நம் எண்ணங்களும், நோக்கங்களும் செயல்களும் மாறும். **ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின** (2 கொரிந்தியர் *5:17*). தேவன் நம் ஒவ்வொரிடமும் நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவை திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோட போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் (வெளி*3:20*). அவர் நம்மை வற்புறுத்தவே மாட்டார். நாமாகவே அவரைத் தேடுகிறோமா அவருககு நம் வாழ்க்கையை ஒப்புக்



கொடுக்கிறோமா என்று எதிர்பார்த்து, நமக்காக பொறுமையோடு காத்திருக்கிறார். நம் இருதயத்துக்குள் வர வாஞ்சையோடு இருக்கிறார். சிலருக்கு எல்லா வசதிகளும், செல்வ செழிப்பும் இருப்பதால் கர்த்தரை தேடமாட்டார்கள். அதனால் கர்த்தர் அவர்களண்டை வரும்போது, அவர்கள் அதை உணர்ந்து கொள்ளமுடியாது. ஏனென்றால், அவர்கள் வாழ்க்கையில் தேவனுக்கு இடமில்லை. அவர்கள் உலக காரியங்களில் மூழ்கியிருப்பார்கள். உலக சிற்றின்பங்களை மகிழ்ச்சியோடு அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். தேவன்மேல் கவனம் செலுத்தவும், அவரை அறிந்து கொள்ளவும் வாஞ்சையில்லாமல் இருப்பார்கள். ஏனென்றால் உலக காரியங்களை செய்வதில் மகிழ்ச்சியோடு இருப்பார்கள். இந்த உலகத்தில் வாழ்வதற்காக, பணத்தை சம்பாதிப்பதிலும், பொருட்களையும் ஆஸ்திகளையும் சேர்த்து வைப்பதிலும், அதை எப்படி பாதுகாப்பாய் வைக்கவேண்டும் என்பதிலும், பணத்தை எப்படி பெருக்கலாம் என்றும் தீவிரமாய் முயற்சித்துக் கொண்டிருப்பார்கள். கர்த்தரைக் குறித்த சிந்தனையே அவர்களுக்கு இருக்காது. இவர்கள் தாங்கள் விரும்பியதை செய்து முடித்ததால் மகிழ்ச்சியோடு இருப்பார்கள். இம்மகிழ்ச்சி நிரந்தரமானதல்ல, தற்காலிகமானது. இவர்களுடைய வாழ்க்கையில் கஷ்டங்கள் புயல்போல வரும்போது, நிம்மதியிழந்து போவார்கள். அவர்களால் திடமாக நிற்க முடியாது. ஆனால், தேவனுக்கு நம் இருதயத்தில் இடம் கொடுத்து, அவர் விரும்பியதை நாம் செய்யும்போது, அவர் கொடுக்கும் மகிழ்ச்சியானது நிரந்தரமானது, திருப்தியளிக்கக்கூடியது, உலகம் கொடுக்க முடியாதது. ஆதலால், அவருக்கு நம் இதயத்தில், வாழ்க்கையில் இடங்கொடுக்கும்போது நிலையான மனநிறைவை பெற்றுக் கொள்ளலாம்.

இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்றும் அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், உயிர்த்தெழுந்து, புதிய வாழ்க்கையை நமக்கு கொடுத்தார் என்றும் விசுவாசிக்கிறவர்கள், அனுதினமும், கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளரவேண்டும். வேதத்தை படித்து தியானிக்க வேண்டும். ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைகொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் (யோவான் *14:23*). நாம் இயேசு கிறிஸ்துவை உண்மையாய் நேசித்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தால், பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் நாம் இருப்போம். நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் (2 கொரிந்தியர் *6:16*). தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளே வாழ்கிறார். யாரெல்லாம் அவரை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிகிறார்களோ அவர்களுக்கு ஆழமான வெளிப்பாடுகளைக் கொடுத்து அவர்களோடு கூட தாம் இருப்பதைக் காண்பிப்பார்.

இயேசுகிறிஸ்து மனிதனாக இந்த உலகத்தில் வந்தபோது, தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்தில் ஆரம்பமாயிற்று. அவர் ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார். பிசாசின் பிடியிலிருந்த அநேகரை விடுவித்தார். அநேகர் தங்கள் இருதயங்களில் அவரை ஏற்றுக் கொண்டார்கள். சிலர் அவரின் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுத்தார்கள். அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார். இப்பொழுது, பரிசுத்த ஆவியானவராக நமக்குள்ளே இருக்கிறார். இயேசு கிறிஸ்து அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை கழுவி, பாவத்திலிருந்து மீட்டெடுத்திருக்கிறார். ஆகையால் நாம் இயேசுகிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள். நாம் நமக்கு சொந்தமானவர்களல்ல. அவர் நம்மை பாவத்திலிருந்து, நோய்களிலிருந்து, போராட்டங்களிலிருந்து விடுவித்து, நம்மை அவருடைய இரத்தத்தினாலே மூடி மறைத்து பாதுகாக்கிறார்.

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்** (மாற்கு *1:15*). இயேசு கிறிஸ்து பிரசங்கித்தபோது, பேசிய முதல் வார்த்தை தேவனுடைய ராஜ்யம் நெருங்கிவிட்டது என்றும், நம் மனதையும், வாழ்க்கையையும் மாற்றிக் கொண்டு, அவரின்மீது நம்பிக்கை வைக்கும்படியாகவும் கூறினார். நாம் கடந்த காலத்தில் செய்த பாவங்களை நினைத்து, பாவ உணர்வடைந்து மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம். பின் பரிசுத்தமாக வாழத் தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது நடத்தைகளில் மாறுதல் காணப்படும். நற்செய்தியை கேட்பதினால் அவர் நமது இரட்சகர், அவர் உண்மையுள்ளவர், நேர்மையானவர் என்பதை அறிந்து, அவர் மீது நம்பிக்கை வைத்து, அவரை சார்ந்து, அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றி வாழ்வோம். இயேசு கிறிஸ்து

பாவத்தின் ஆளுகையிலிருந்து நம்மை மீட்டு எடுத்து, விடுவித்து அவருடைய ராஜ்யத்தை தொடங்கவே இந்த உலகத்திற்கு வந்தார். ஒடுக்கப்பட்டவர்களும், புறக்கணிக்கப்பட்டவர்களும், ஏழைகளும், நம்பிக்கையிழந்தவர்களும், அவர் பேசியதை வாஞ்சையோடு கேட்டனர். இயேசு கிறிஸ்துவிடமிருந்து புறப்பட்ட வார்த்தைகள், நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையளிப்பதாயும், நீதியும், நியாயமுள்ள வார்த்தைகளாயும், விடுதலையளிக்கக்கூடிய வார்த்தைகளுமாய், விடுதலையளிக்கக்கூடிய வார்த்தைகளுமாய் இருந்தது. **இயேசு எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்** (மத்தேயு 4:23). அவர் பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் பிரயாணம் பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியை ஜனங்களுக்கு பிரசங்கித்தார். அநேகருடைய பலவிதமான கொடிய வியாதிகளையும் குணமாக்கினார். பொல்லாத ஆவியை கொண்டிருந்த அநேகரை விடுவித்தார். பிசாசுகளை துரத்தினார். திரளான ஜனங்கள், அவருடைய போதனைகளைக் கேட்பதற்கும், தங்கள் நோயிலிருந்து குணமாவதற்கும் வந்தனர். அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார் (லூக்கா 7:21).

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்** (அப்போஸ்தலர் 10:38). அவர் ஜனங்களிடம் அதிகாரத்தோடு போதித்தார். அவர் போதனையை கேட்க அநேக ஜனங்கள் வாஞ்சையோடு கூடி வந்தனர். ஜனங்கள் புரிந்து கொள்ளும்படியாக அநேக காரியங்களை கற்றுக் கொடுத்தார். தேவன் நம்மோடுகூட இருக்கிறார். அவர் நமக்கு பாதுகாப்பாக, ஆதரவாக இருக்கிறார். நம் நோய்களையெல்லாம் அவரால் குணப்படுத்த மட்டுமல்ல, நம் இருதயத்தின், உள்ளார்ந்த மனிதனின் காயங்களை ஆற்றி, வேதனைகளை நீக்கி சந்தோஷம், சமாதானம், ஆறுதல் தரமுடியும். எந்தவிதமான பிரச்சனைகளையும் அவரால் சரிப்படுத்த, கையாள முடியும். தேவனுடைய வார்த்தைகள் நமக்கு சுதந்திரத்தையும், நம்பிக்கையையும் இருதயத்திற்கு சமாதானத்தையும், இவ்வுலகத்திற்குப்பின் பரலோகத்தில் அவரோடுகூட இருக்கும் நிலையான வாழ்வையும் நமக்கு அளிக்கும்.

**நான் தேவனுடைய ஆவியினால் பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே** (மத்தேயு 12:28). இயேசு கிறிஸ்து தேவனுடைய வல்லமையினாலே அசுத்த ஆவிகளை துரத்தினார். இது தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறது என்பதை காட்டுகிறது. இயேசு கிறிஸ்து பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே வந்தார். பிசாசு ஒரு மனுஷ சரீரத்துக்குள் வரும்போது, அந்த சரீரத்தை தீயிலும், தண்ணீரிலும் விழவைத்து அலக்கழிக்கிறான். இப்படிப்பட்ட பிசாசின் அலைக்கழிப்பிலிருந்தும், அழிவிலிருந்தும் விடுதலை தருவதே பரிசுத்த ஆவியானவர். எங்கே பரிசுத்த ஆவியானவர் உண்டோ அங்கே விடுதலையுண்டு.

யோபு, பெரிய செல்வந்தனாயிருந்தான். அவன் நீதிமானும், கர்த்தருக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். (யோபு 1:8). சாத்தான் கர்த்தரிடம், யோபுவிடமிருக்கும் எல்லா சொத்து, சுகவாழ்வையும் எடுத்துப்போடும். அப்பொழுது, அவன் உம்மைவிட்டு விலகுவான் என்றான். கர்த்தரும் அதற்கு அனுமதி கொடுத்தார். சாத்தான் யோபுவின் சொத்து, பிள்ளைகள் எல்லாவற்றையும் அழித்துப்போட்டான். உடலில் வியாதியை கொண்டு வந்தான். ஆனால் யோபுவோ, எல்லாவற்றையும், தனக்கு கொடுத்தது கர்த்தரே. கர்த்தர் கொடுத்தவைகளைக் காட்டிலும், கர்த்தரே எனக்கு மேலானவர் என்று அந்த துன்பத்திலும் அறிக்கை செய்தான். பொறுமையோடு பாடுகளை சகித்தான். கர்த்தரை அவன் மறுதலிக்கவில்லை. அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் உறுதியாயிருப்பேன் என்றான். இதுவே நம் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுத்து, அவருடைய ராஜ்யத்தை தேடுவதாகும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மலைப்பிரசங்கத்தில் இப்படியாக போதித்தார்:

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத்தேயு 5:3). நாம் ஒவ்வொருவரும் இப்படியாக இருக்க அவர் விரும்புகிறார்.





இருதயத்தில் தங்களை தகுதியில்லாதவர்கள், முக்கியமில்லாதவர்கள் என்று கர்த்தருக்கு முன் தாழ்த்துகிறவர்களே ஆவியில் எளிமையுள்ளவர்கள். அப்படிப்பட்டவர்களே, இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரண்டை வரமுடியும். பாக்கியவான்கள் என்றால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் சந்தோஷத்தோடு, மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படுமளவிற்கு இருப்பார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் செழிப்பாயிருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கை சமாதானமுள்ளதாயும். மனநிறைவுள்ளதாயும் இருக்கும். தேவனுடைய ஆதரவும், உதவியும் எப்பொழுதும் அவர்களுக்கு கிடைக்கும். தீமையான காரியங்கள் வந்தாலும் கர்த்தர் அவர்களை விடுவித்து பாதுகாப்பார். சிக்கல்களும், போராட்டங்களும் வந்தாலும், அதை பொருட்படுத்தாமல், கவலையின்றி இருப்பார்கள். இவ்வுலகப் பெருமை எல்லாம், இவ்வுலகத்தோடு அழிந்துவிடும். பெரிய பதவியில் இருக்கும் தலைவர்கள், பணம் படைத்தவர்கள், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் மட்டுமே பரலோகத்துக்கு செல்ல முடியும். இந்த உலகத்தில் ஐசுவரியவானாய் வாழ்ந்தவன் மரித்து பாதாளத்தில் வேதனைப்படுவதையும், தரித்திரனாய் வாழ்ந்தவன் மரித்து பரலோகம் சென்றதையும் லூக்கா 16:19-24-ல் காணலாம். பாதாளத்தில் வேதனைகள் உண்டு. மற்றவர்களுக்கு தீமை செய்தது, தவறாக நடந்தது, சுயநலத்தோடு தேவையில் இருந்தவர்களுக்கு உதவி செய்யாதது, தேவனைத் தேடாமல், அவரை மகிமைப்படுத்தாமல் இருந்தது, நம் இரகசிய திட்டங்கள், சிந்தனைகள், சொற்கள் எல்லாம் வெளிவரும் இருளில் பேசினவைகள் வெளிச்சத்துக்கு வரும். பெயருக்கு கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு, மனந்திரும்பாமல் மரணமடைந்தால் பாதாளம் செல்வார்கள். சிறுமைப்பட்டு (தாழ்மை) ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ மிகுந்த கிருபையளிக்கிறார்.

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது** (ரோமர் 14:17). ஜனங்கள் இந்த உலகத்தில் புசித்து குடித்து இருந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கை சந்தோஷமும், சமாதானமுமாக இருக்க வேண்டும். இந்த சந்தோஷம், சமாதானத்தை தேவன்தான் கொடுக்கமுடியும். தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நீதிமானாய் வாழ வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆவியானவர் நமக்குள் வரும்போது மாம்சீக எண்ணங்கள் நம்மைவிட்டு போய்விடும். ஆவியின் சிந்தை நமக்குள் வரும். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோமர் 8:6). கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கும்போது, நம் வாழ்க்கையில் சந்தோஷமும் சமாதானமும் வரும்.

இன்றைக்கு நிறையபேர் சாப்பிடுவதற்கும், உடுத்துவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையெல்லாம் சாப்பிடுவதும், உடுத்துவதும்தான். இது மாம்ச சிந்தை. உண்பதைக் காட்டிலும் நம் ஜீவனும், உடுத்துவதைக் காட்டிலும் நம் சரீரமும் முக்கியம் என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார். நாம் ஆண்டவரைத் தேடும்போது, அவரை தொழுதுகொள்ளும்போது, நம்முடைய தேவைகளையெல்லாம் அவர் சந்திப்பார் என்று அவரே சொல்கிறார். நம் புறம்பான மனுஷனுக்கு என்ன தேவை என்பதை உலக தகப்பன் அறிவான். ஆனால், பரம தகப்பனோ, நம் புறம்பான மனுஷனுக்கும், நம் உள்ளார்ந்த மனுஷனுக்கும் உள்ள தேவையை அறிவார்.

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்** (மத்தேயு 6:33). நம் வாழ்க்கையில் நாம் செய்யும் எல்லா

காரியங்களிலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். நம் தேவைகளுக்கும், உதவிக்கும், அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும். அவருக்கு கீழ்ப்படிந்து, அவரைப்போல வாழவேண்டும். அவருடைய வாஞ்சை, நம் வாஞ்சையாக மாறவேண்டும். தேவனுக்கும் நமக்கும் இடையே உலகக் காரியங்கள் வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். நாம் இந்த உலகத்தில் இருந்தாலும் இந்த உலகத்தால் வாழ்வது கிடையாது, கர்த்தர்தான் நம்மை வாழவைக்கிறார் என்பதே. தேவனுடைய ராஜ்யம் எனப்படுவது, அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் குறிப்பிடுகிறான்: நீங்கள் **இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரண மான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்க தாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்** (ரோமர் 12:2). இந்த உலக மனிதர்களுடைய சுபாவங்களுக்கு ஏற்றாற் போல நாம் நடக்கக்கூடாது. அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய ஆளுகை இல்லை. கர்த்தருடைய ஸ்தானத்தில் பணத்தை யும், பதவியையும், மற்ற கொள்கைகளையும் வைத்திருப்பார்கள். சிலர் தங்களுக்கு பிரியமான தையே செய்து கொண்டு, தங்களைத் தாங்களே ஆளுகை செய்து கொண்டிருப்பார்கள். மற்றும் சிலரை பிசாசு ஆளுகை செய்து கொண்டிருப் பான். இவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தரை ஆராதிப்பதும், துதிப்பதும், பரிசுத்தமான வாழ்க்கையும் இருக்காது. நாமோ கர்த்தருடைய சித்தத்தை தெரிந்து கொண்டு, அதன்படி வாழவேண்டும். அவரது சித்தம் நம்மையும், நமது வாழ்க்கையையும், பரிபூரணப்படுத்தும். இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழும் நாமே அவருக்கு பிரியமான காணிக்கை.

**வேதத்தை படிப்பதன் மூலம் தேவ ஞானம் நமக்குள் வரும். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்** (நீதிமொழிகள் 1:7). ஞானத்தின் மூலம் கர்த்தருக்கு பயப்படும் பயத்தை உணர்ந்து, அனைத்தும் அறிந்திருக்கிற தேவனைப்பற்றி அறிந்து கொள்ளலாம். ஞானத்தை வெள்ளியைப்போலவும், மறைந் துள்ள புதையல் களைத் தேடுகிறது போல தேடவேண்டும். (நீதிமொழிகள் 2:4) வாஞ்சையோடு, கருத்தோடு வேதவார்த்தையை படிக்கிறவர்களுக்கு தேவன் ஞானத்தை கொடுக்கிறார்.

நாம் இரட்சிக்கப்படும்போது, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல இருக்கிறோம். குழந்தை ஆரோக்கியமாய் வளர நல்ல ஊட்டச்சத்துள்ள உணவை கொடுத்தால்தான் நன்றாக வளரும். அதுபோல நாம் கிறிஸ்துவுக்குள் வளரவேண்டுமானால், வார்த்தையை படிக்கும்போதுதான் போஷிக்கப்படுவோம். ஆவிக்குரிய ரீதியில் (உள்ளார்ந்த மனிதனில்) வளர வார்த்தையின் மேல் தாகம் வேண்டும். வார்த்தையை படிக்க படிக்க தேவனுக்கு பிரியமில்லாத சுபாவங்கள் நம்மைவிட்டு, அகன்றுபோகும். **சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சலகவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, வேதவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சை யாயிருங்கள்** (1 பேதுரு 2:2,3). நாம் எப்படி யாக இருக்கிறோம்? வேதத்தை வாஞ்சையோடு படிக்கிறோமா? அதற்கு கீழ்ப்படிந்து நடக்கிறோமா? கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் அனுதினமும் வளருகிறோமா?

## தேவனுடைய ராஜ்யம் சிறுபிள்ளைகளைப் போன்றவர்களுக்குரியது

ஜனங்கள் தங்கள் சிறுபிள்ளைகளை இயேசுகிறிஸ்து ஆசீர்வதிப்பதற்காகக் கொண்டு வந்தனர். சீஷர்கள் அவர்களை தடைபண்ணினார்கள். இதனை இயேசுகிறிஸ்து கவனித்து **சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்று சொல்லி அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்** (மாற்கு 10:14-16). தேவனுடைய ராஜ்யம் சிறுபிள்ளைகளைப் போன்றவர்களுக்குரியது. யாரெல்லாம் தங்களை தாழ்த்தி சிறுபிள்ளைகளைப்போல முழுவதுமாக கிறிஸ்துவை நம்பி, அவரை சார்ந்து, அவரண்டை வருகிறார்களோ, அவர்களே தேவனுடைய ராஜ்யத்திற்குள்ளிருக்கிறார்கள் சிறுபிள்ளைகள் குற்றமற்றவர்களாக, எல்லாவற்றையும் நம்புகிறவர்களாக; மற்றவர்களுக்கு தீமை செய்யாதவர்களாக நேர்மையானவர்களாக நல்ல எண்ணத்தோடு இருப்பார்கள். அதுபோல தேவனுடைய ராஜ்யத்திற்குள்ளே வருபவர்களும் இருப்பார்கள். ஒருவருக்கொருவர் உள்ள உறவு முறையில், சிறுபிள்ளைகளைப்போல, தாழ்மையோடு



இருக்கவேண்டும். தேவனுடைய ராஜ்யத்துக்குள் வரமுடியாதபடி, தடை செய்கிற நம் சொந்த குறிக்கோள்கள் மற்றும் காரியங்களை நம்மைவிட்டு அகற்றவேண்டும். தேவனுடைய ராஜ்யத்திற்குள் வருவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்து கொண்டு, அதன்படி நடக்க நாம் உறுதியோடு இருக்கவேண்டும். அவருடைய ராஜ்யத்தின் காரியங்களே நம் தொழிலைவிட, நம் வேலையைவிட மேன்மையானது என்பதை புரிந்து கொள்ளவேண்டும். நாம் நல்லவர்களாக இருந்தால் மட்டும் அதற்குள் போகமுடியாது. தாழ்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.



**நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்** (மத்தேயு 18:3). மனந்திரும்பி பிள்ளைகளைப்போல தங்களைத் தாழ்த்தாதவர்கள் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஒரு சிறுபிள்ளை எப்படி தன் தகப்பனையோ, தாயையோ முழுமையாக நம்பி இருக்குமோ, அதுபோல நாமும் நம் பரம தகப்பனை முழுமையாக நம்ப வேண்டும்.

சீஷர்கள் சிறுபிள்ளைகளை அற்பமாக எண்ணினார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்து செய்து கொண்டிருந்த ஊழியத்திற்கு தடையாக இருப்பார்கள் என்று நினைத்து, அவர்களை அவரிடம் விட அனுமதிக்கவில்லை. இயேசுகிறிஸ்து இதைக்கண்டு கோபமும், வருத்தமும் அடைந்தார். அவரிடத்தில் வரும் யாரையும் அவர் அற்பமாக எண்ணவே மாட்டார். அவர்கள் மீது தம் அன்பையும், கவனத்தையும் செலுத்துவார். சிறுபிள்ளைகளை நாம் அற்பமாக எண்ணக்கூடாது. அவர்களுடன் நாம் நேரத்தை செலவிடவேண்டும். சிறுபிள்ளைகள், கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்வது, கர்த்தரது வாஞ்சை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கர்த்தரண்டை வழிநடத்துபவர்களாக இருக்கவேண்டும். பிள்ளைகளை ஜெபத்திலும், வேதத்தை தியானிப்பதிலும் வளர்க்கவேண்டும். ஏன் ஜெபிக்கவேண்டும் என்பதையும், ஏன் வேதத்தை படிக்கவேண்டும் என்பதையும், பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் வளர்வார்கள். தேவனே அவர்களை ஆளுகை செய்வார். ஆதலால் பாவத்திற்கு வலகி இருப்பார்கள். தேவன் அவர்களை பாதுகாப்பார்.

## ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குக் சொல்லுகிறேன் (மத்தேயு 19:23). தலைவன் ஒருவன் இயேசுகிறிஸ்துவிடம் வந்து, பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டதற்கு இயேசுகிறிஸ்து, தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படி கூறினார். அவனோ தேவனுடைய கட்டளைகள் எல்லாவற்றிற்கும் தான் கீழ்ப்படிந்து நடப்பதாக கூறினான். இயேசுகிறிஸ்து அவன் பொருட்களின் மேல் இச்சை வைத்திருப்பதை ஆவியில் உணர்ந்து, அவனிடம் "உன்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் கிடைக்கும்" என்றார். அவன் அதைக் கேட்டவுடன் மிகுந்த வருத்தமடைந்தான். அவன் மிகுந்த ஐசுவரியமுள்ளவனாக இருந்தான். அவன் எல்லாவற்றையும் தானே வைத்துக்கொள்ள நினைத்தான். அவன் தனக்கு பாதுகாப்பு என்று நினைத்ததை இயேசுகிறிஸ்து விற்கும்படி கூறினார். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் (மத்தேயு 6:21). தேவன்தான் நம் பாதுகாப்பு, நமது சொத்து நமக்கு பாதுகாப்பு

அல்ல.

## யார் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது

நம் ஆத்துமா இரட்சிக்கப்படாமல், நாம் தவறாமல் ஆலயத்திற்கு போவதினாலோ, ஜெபிப்பதினாலோ, உபவாசிப்பதினாலோ, துதிப்பதினாலோ, நற்செயல்களை செய்வதினாலோ, பக்தியோடு இருப்பதினாலோ, காணிக்கை, தசமபாகம் கொடுப்பதினாலோ, பாவம் செய்யாமல் இருப்பதினாலோ, ஒரு பிரயோஜனமும் இல்லை. இவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் வரமுடியாது. **ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்** (யோவான் *3:3*). நாம் எப்படியாக இருக்கிறோம்? இதுவரை மனந்திரும்பவில்லையென்றால், இன்றே நாம் செய்த பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்வோம். நம் பாவங்களை நீக்குவதற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தினார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசாயா *53:5*). அவரை விசுவாசித்து மன்னிப்பை பெற்றுக் கொள்கிற ஒவ்வொருவருடைய பாவத்தை மன்னித்து அவருடைய பிள்ளைகளாக்கி விடுகிறார்.

**ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும், பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்** (யோவான் *3:5*). பிலிப்பு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியையும், இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் ஜனங்களுக்கு எடுத்துக் கூறினான். விசுவாசித்த அனைவரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். மனந்திரும்பி பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஒருவன், தான் அவரோடு மரணமடைந்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்ததற்கு அடையாளமாக ஞானஸ்நானம் அமைகிறது. ஞானஸ்நானத்தின்போது தண்ணீருக்குள் முழுவதும் மூழ்குவது, கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்படுவதற்கு அடையாளமாக உள்ளது. தண்ணீருக்குள்ளிருந்து வெளியே எழும்புவது கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுவதற்கு அடையாளமாக உள்ளது. இயேசுகிறிஸ்துவும் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு *3:16*).



பேதுரு இப்படியாக பிரசங்கித்தான்: **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்** (அப்போஸ்தலர் *2:38*). வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் மூவாயிரம்பேர் மனந்திரும்பினார்கள். மனந்திரும்பி, ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டவர்கள், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று கர்த்தர் வாக்கு கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறும்போதுதான் நாம் ஆவிக்குரிய பெலன் அடைகிறோம்.

**யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்** (லூக்கா *7:29*). வரி வசூலிப்போரும் கூட யோவானிடம் வந்து நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டு, மனந்திரும்பி, ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டனர். தன்னிடம் வந்த ஜனங்களிடம் யோவான், நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்கள் என்பதற்கு அடையாளமாக அதற்கேற்ற குணநலன்கள் உள்ளவர்களாக உங்கள் இருதயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காட்ட வல்ல



செயல்களை செய்யும்படி கூறினான்.

நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தால் மட்டும் தேவனுடைய ராஜ்யத்துக்குள் வரமுடியாது. மனந்திரும்பி தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ்பவர்கள் மட்டுமே இந்த உலகத்தை விட்டுபோகும் போது, பரலோகத்துக்கு செல்லமுடியும். மனந்திரும்பாமல் பாவத்தோடு மரித்தவர்கள் நரகத்திற்கு செல்வார்கள். மனந்திரும்பினால் மட்டும் போதாது, நற்செயல்களை செய்பவர்களாக இருக்கவேண்டும். கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும் (1 யோவான் *2:6*). இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் எப்படி வாழ்ந்தாரோ, அவரைப்போல வாழ வேண்டும். அவர் பரிசுத்தமாக வாழ்ந்து, பாவத்தையும் சோதனைகளையும் வென்றார். மனதுருக்கத்தோடு நடந்து கொண்டார். உபவாசித்தார். பிதாவை நோக்கி ஜெபித்தார். தேவபிரசன்னத்தில் நிறைந்திருந்தார். பிதாவுக்கு கீழ்ப்படிந்திருந்தார். அவரைப்போல நாம் வாழ்ந்து, அவர் செய்த ஊழியத்தை நாமும் செய்யவேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டும். நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வழிகாட்டியாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு நன்மை செய்பவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்களுடைய மனது வேதனைப்படும்படியாக நடந்து கொள்ளவோ, பேசவோ கூடாது. நாம் குற்றமற்றவர்களாக, கபடற்றவர்களாக இருக்கவேண்டும்.

## பாவத்தில் வாழ்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் செல்ல முடியாது

**அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை** (1 கொரிந்தியர் *6:9,10*). சிலையை தெய்வம் என்று எண்ணி வணங்குபவர்கள், தேவனுடைய இடத்தில் மனிதர்களையோ பொருட்களையோ, பணத்தையோ வைப்பவர்கள், தேவன் தனக்கு கொடுத்த மனைவியை தவிர மற்ற பெண்களோடு தொடர்பு வைத்துக் கொள்பவர்கள், தங்கள் வாழ்க்கையிலும், எண்ணங்களிலும் அசுத்தமாய் பரிசுத்தமில்லாமல் வாழ்பவர்கள், மற்றவர்களுடைய பொருட்களின்மேல் ஆசைப்படுபவர்கள், குடிப்பவர்கள், ஏமாற்றுபவர்கள், மற்றவர்களுக்குரிய சொத்துக்களை அடைய வேண்டுமென்று விருப்பப்பட்டு பேராசையினால் தனக்கு மேலும் மேலும் வேண்டும் என்று ஆசைப்படும் சுயநலக்காரர்கள், தன்னிடம் இருப்பதில் திருப்தியில்லாமல் இன்னும் பெருக்கி ஆதாயமடைபவர்கள், பணமோசடி செய்பவர்கள், மற்றவர்களை பயமுறுத்தி அவர்களுக்குரியதை எடுப்பவர்கள், இரகசியமாக செய்யப்படும் பாவங்களில் ஈடுபடுபவர்கள், அசுத்த உதடுள்ளவர்கள், மற்றவர்களைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் சொல்பவர்கள் (அவதூறு), கோபம், பொறாமை, சண்டை, பகை, விரோதத்தோடு இருப்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் இடம்பெற முடியாது. பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்.

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான், நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்** (யோவான் *10:10*). கர்த்தர் மனிதர்களாகிய நமக்கு சுயாதீனத்தை கொடுத்திருக்கிறார். நாம் சுயமாக நம் விருப்பம்போல நடக்கலாம். நம்மை தேவனுடைய ஆளுகைக்கும் விட்டுக்கொடுக்கலாம் அல்லது சாத்தானுடைய ஆளுகைக்கும் விட்டுக் கொடுக்கலாம். நம்முடைய மனதை பொருட்கள் மீதும், பதவியின் மீதும், பணத்தின் மீதும் செலுத்தும்போது, அவைகளின் மீது ஆசைவரும். அந்த ஆசை இச்சையாக மாறி, பாவத்தில் கொண்டுபோய்விடும். எப்படியாவது, எந்த வழியாவது, குறுக்கு வழியிலாவது பணத்தை சம்பாதிக்கவேண்டும், பணத்தை சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மை ஆளுகை செய்யும். இப்படிப்பட்ட சிந்தையை கொண்டு வருவதே சாத்தான். இந்த சிந்தை நம்மை அழித்துவிடும். சாத்தானுக்கு நம்மை அழிப்பதும், நிர்மூலமாக்குவதுமே நோக்கமாகும். ஆனால், கர்த்தரோ, தேவனுடைய ராஜ்யமாகிய சமாதானம், சந்தோஷம், ஒருமனம், குடும்ப ஐக்கியம், சகோதர சிநேகம் இவைகளையெல்லாம் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்னைப்போல பிறனையும் நேசி என்ற பிரமாணத்தை நமக்கு கற்றுக் கொடுத்து, நம்மை

பரிபூரணப்படுத்தவும், நீடிய வாழ்வை வாழ வைக்கவும் விரும்புகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறாகக் கூறுகிறான்: **''எனக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்''** (பிலிப்பியர் *3:7*). பவுல் தன் கடந்த காலத்தில் கல்வி தகுதிகள், திறமைகள், முயற்சிகள், பலராலும் உயர்வாக போற்றப்படுதல், பதவி, புகழ், செல்வம், சாதனைகள் முதலியவற்றை லாபமாக முக்கியமானதாக நினைத்தான். அவன் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டபின் கர்த்தரை அறிகிற அறிவுக்கு முன்பாக இவையெல்லாவற்றையும் குப்பையாக நினைத்தான், நஷ்டம் என்று எண்ணினான். இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக அவை பயனற்று போய்விட்டது. அநேகர் தாங்கள் பரம்பரையாக, கிறிஸ்தவ குடும்பத்தில் உள்ளவர்கள், பக்தி வைராக்கியமுள்ளவர்கள் (பாரம்பரியம், சடங்காச்சாரத்தில் இருப்பவர்கள்) என்றும் ஒருதவறும் செய்யாதவர்கள் என்றும் நற்செயல்கள், தானதர்மங்கள் செய்பவர்கள் என்றும் பெருமையாக பேசி தங்களை நீதிமான்கள் என்று நினைத்துக் கொண்டிருப் பார்கள். இவர்களே சுயநீதியை உடையவர்கள். சுயநீதி தேவனுக்கு முன்பாக அழுக்கான கந்தையைப்போல் உள்ளது. தேவனுக்கும் நமக்குள் உள்ள உறவு எப்படியிருக்கிறது? இதுவே முக்கியம். தேவனைப்பற்றி ஆழமாக அறிந்து கொண்டு, அவரைப் பற்றி அறிகிற அறிவில் தொடர்ந்து முன்னேறி சென்று அவரோடு நெருக்கமான உறவை வைத்துக் கொள்ள தன்னை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இயேசு கிறிஸ்து இவ்வாறாக கூறுகிறார்: **கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்** (லூக்கா *9:62*). கர்த்தருடைய ராஜ்யத்துக்குள் வந்த விசுவாசிகளும், கர்த்தருடைய ஊழியத்தை செய்து கொண்டிருப்பவர்கள்கூட, கர்த்தரை விட்டு விலகி பின்மாற்றமடைந்து விழுந்து போகக் கூடும். உலகத்தின் மேல் ஆசை வைப்பவர்கள் தேவனுக்கு பிரியமாய் இருக்கமுடியாது. **உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான்** (யாக்கோபு *4:4*) நம் ஆசை தேவன் மேல் மட்டும் இருக்கிறதா? அல்லது உலக பொருட்களின் மீதும், பணத்தின் மீதும், ஆஸ்திகள் மீதும், மனிதர்கள் மீதும் இருக்கிறதா? தேவனுக்கு பிரியமாய் இருக்க விரும்புகிறீர்களா? அல்லது மனிதர்களுக்கு பிரியமாய் இருக்க விரும்புகிறீர்களா? தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழும்போது, பரத்திலிருந்து எல்லா ஆசீர்வாதமும் கடந்துவரும் (யாக்கோபு *1:17*). இந்த உலகத்தின் மீதுள்ள ஆசையை விட்டு விட்டு தேவனை அதிகமாக நேசிக்கவேண்டும். இந்த உலகம் பொல்லாதது. ஏமாற்றுவது, கொலை, கொள்ளை, பொருளாசை, கொடூரம், இச்சைகள் போன்ற பாவத்தால் நிறைந்திருக்கிறது. இப்பாவங்களில் இருப்பவர்கள் நரகத்திற்கு செல்வார்கள். இவற்றிலிருந்து விடுவித்து காத்துக்கொள்ள தேவனுடைய ராஜ்யத்துக்குள் நாம் வரவேண்டும். **உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை** (*1* யோவான் *2:15*). பணத்தை சேர்ப்பதைக் குறித்தும், படிப்பு, பதவியைக் குறித்து மட்டும் சிந்திக்கிறோமா? இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஒருவனை சிநேகித்து மற்றவனை பகைப்பான். பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்த தோமா இவ்வுலகத்தின்மேல் ஆசை வைத்து தேவனுக்கு பகைஞனானான்.

**நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்** (அப்போஸ்தலர் *10:22*). இயேசுகிறிஸ்து பாடுகளை ஏற்றுக் கொண்டு பொறுமையோடு சகித்தார். அதுபோல நம் வாழ்க்கையிலும், பாடுகள், துக்கங்கள், வேதனைகள், வியாதிகள், சோதனைகள் வரும்போது பொறுமையோடு சகிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் பாடுகளின் மத்தியிலும், தைரியமாய் சுவிசேஷத்தை அறிவித்தான். தேவனுடைய கிருபையில் நிலைத்திருக்கும்படி புத்தி சொன்னான் (அப்போஸ்தலர் *11:23*).

**அவர் (இயேசுகிறிஸ்து) தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும் பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்** (லூக்கா *9:1,2*). இயேசு கிறிஸ்துவை பின்பற்றி, அவரோடு ஐக்கியமாக வாழும் ஒவ்வொருவரும் அவரைப் போலவே ஊழியம் செய்யும்படி, அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்திருக்கிறார். என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும், பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் *14:12*). இந்த உலகத்திலே எப்படி சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் வாழ்வது என்பதையும், பரலோகம் என்று ஒன்று இருப்பதையும், இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதே பரலோகத்திற்குச் செல்வதற்கான ஒரே வழி என்பதையும், மற்றவர்களுக்குச் சொல்வதே ஊழியம். இயேசுகிறிஸ்து, பாவங்களிலிருந்து நோய்களிலிருந்து போராட்டங்களிலிருந்து விடுதலை கொடுப்பார் என்று அறிவிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் போது, அவர்கள் உள்ளத்தில் சந்தோஷமும் சமாதானமும் அவருடைய பிரசன்னத்தையும் கர்த்தர் கொடுக்கிறார். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

பவுலும், சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்தில் நற்செய்தியை வசனத்தோடே மாத்திரமல்ல. வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் கொண்டு சென்றனர் (*1* தெசலோனிக்கேயர் *1:5*) அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது (அப்போஸ்தலர் *5:6*). அதனால் அநேகர் கர்த்தர்மேல் விசுவாசம் வைத்தார்கள். நாமும் ஆவியானவருடைய பெலத்தினால் ஊழியத்தை செய்யும்போது, அநேகர் கர்த்தருக்குள் வருவார்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



**ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+ 91 - 44 - 22353500**

**+ 91 - 9940667881**

www.kennedyministries.org

E-mail: nijakennedy@yahoo.com



# தீர்க்கதரிசனம் நிறைவேற..

– எஸ். பால்ராஜ் கென்னடி

**பு**திதாகத் தீர்க்கதரிசனங்கள் கேட்டாயிற்று, வாக்குத்தத்தங்களும் பெற்றுக் கொண்டாயிற்று. தீர்க்கதரிசனங்களையெல்லாம் செல்போனிலும், வாய்ஸ் ரெக்கார்டரிலும் பதிவு பண்ணி வைத்திருக்கிறேன். ஏன் சி.டி.யிலும்கூட பதிவு பண்ணி பத்திரப்படுத்திவிட்டேன். வாக்குத்தத்தங்களையெல்லாம் புக் மார்க்கராக, காலண்டராக வைத்துள்ளேன். இனி என்ன செய்யவேண்டும்? அது நடக்கும்வரை காத்திருக்கவேண்டும். இதுதானே நீங்களும் நினைக்கின்றீர்கள்?

கர்த்தர் சொல்லிவிட்டார், அவரே அதை நடத்திவிடுவார், நான் என்ன பண்ணுவது? என்றுதானே நினைக்கின்றீர்கள். உங்களுக்குச் சொல்லப்பட்டத் தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறவேண்டுமானால், உங்களுடைய பங்கும் அதில் உண்டு என்பதை உணர்ந்து நீங்கள் அதைச் செய்ய வேண்டும்.

முதலாவது காரியம், கர்த்தர்தான் தம்முடைய தீர்க்கதரிசியைக்கொண்டு பேசினார், அது மனுஷனுடைய வார்த்தையல்ல என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். **ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது** (1 தெசலோனிக்கேயர் 2:13). இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் எவ்வளவு எளிமையாகச் சொல்லுகிறார் பாருங்கள். பவுலின் வார்த்தைகளை தெசலோனிக்கேய பட்டணத்து மக்கள், ஒரு மனுஷனுடைய வார்த்தையாகக் கேட்காமல், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் பவுலிடம் சொல்லி, அதையே பவுல் தங்களிடம் பேசுகிறார் என்று கேட்டார்கள். அவர்கள், பவுலைப் பார்க்கவில்லை, பவுலுக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவரையேப் பார்த்தார்கள்.

இதை, அப்போஸ்தலனாகிய பேதுருவும், இப்படியாகச் சொல்லுகிறார்: **அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்** (2 பேதுரு 1:19-21). அப்போஸ்தலனாகிய பவுலுக்கும், பேதுருவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அப்போஸ்தலனாகிய பேதுரு, தேவன் மாம்சத்தில் இயேசுகிறிஸ்துவாய் இந்தப் பூமியில் இருந்தபோது, சரீர பிரகாரமாக அவர் கூடவே இருந்தவர். இரவும், பகலும் இயேசுகிறிஸ்து அவருடன் பேசி, அதை (மாம்சக் காதுகளினால்) கேட்டவர் பேதுரு. ஆனால், பவுலின் அனுபவம் வேறு. இவர் இயேசு கிறிஸ்துவோடு சரீர பிரகாரமாகக் கூட இருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர்தான் பவுலோடு இடைபட்டு, எல்லாக் காரியங்களையும், பவுலின் ஆவியிலே வெளிப்படுத்தினார். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும்போது, கர்த்தருடைய ஆவியானவர் உணர்த்தி, வெளிப்படுத்தி, பவுல் எழுதியிருக்கிறக் காரியங்களெல்லாம் மிகவும் ஆழமானவை என்றும், தனக்கே புரிவதற்குக் கடினமாக இருக்கிறது என்கிறார். இதோ வேதத்திலிருந்து பேதுருவின் வார்த்தைகள்: **மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது..** (2 பேதுரு 3:15-16). கலாத்தியருக்கு பவுல் எழுதின நிருபத்தில், தான் 15 நாட்கள் அப்போஸ்தலனாகிய பேதுருவுடன் தங்கியிருந்ததாகக் குறிப்பிடுகிறார். அப்போது, கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் சொலல, பவுல் தான் எழுதியிருந்தக் காரியங்களை பேதுருவிடம் காண்பித்திருக்கிறார். அதைப் படித்த பிறகுதான் மேற்கூறியக் காரியத்தைப் பேதுரு குறிப்பிடுகிறார்.

அப்படியானால், இப்போதும் அதே பரிசுத்த ஆவியாவர்தானே தம்முடைய ஊழியக்காரனாகிய தீர்க்கதரிசி மூலம் உங்களோடு பேசியிருக்கிறார். கர்த்தர்தான் உங்களோடு பேசினார் என்று விசுவாசியுங்கள். அப்பொழுதுதான் அந்தத் தீர்க்கதரிசனத்தின் பலனை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெறமுடியும். மேலும் கர்த்தருடைய வார்த்தையைத் தொடர்ந்து படியுங்கள். வேதத்தின் வார்த்தைமாத்திரமே உங்களுக்கு அந்த விசுவாசத்தைத் தரும் (ரோமர் 10:17). வேதத்தைப் படிக்கப் படிக்க உங்களுக்குள் விசுவாசம் பெருகும். அந்த விசுவாசமே, தீர்க்கதரிசனத்தின் பலனை உங்களுக்குப் பெற்றுத்தரும். இயேசு கிறிஸ்துவே உங்களுக்குள் அந்த விசுவாசத்தைத் தருவார் (எபிரெயர் 12:1). விசுவாசமில்லாமல் தேவனால் எதையும் செய்ய முடியாது. வேதத்தைத் தொடர்ந்து படியுங்கள். இயேசுகிறிஸ்துதாமே உங்களுக்குத் தமது விசுவாசத்தைத் தந்து, அந்த விசுவாசத்தின்படி தாம் சொன்ன தீர்க்கதரிசனத்தை உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவாராக! ஆமென்!



# ஆவியில் நிரம்பி ஜெபிப்பது எப்படி?

— ஜான் பன்யன்

<u>சென்ற இதழ் தொடர்ச்சி</u>

**தே**வன், ஜெபத்தில் உங்கள் குரலின் தன்மையைக் கவனிப்பதில்லை, வெளித்தோற்றமான அன்பான வார்த்தைகளைக் கவனிக்கப்போவதில்லை.

ஒரு மனிதனுடைய ஜெபம் சரியானதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டி சரிசெய்ய உதவுவது பரிசுத்த ஆவியானவர்தான். அநேகர்களுடைய ஜெபங்கள் உதட்டளவிலே உள்ளதாக இருக்கின்றன. பாவத்தின் விளைவாகிய பரிதபிக்கத்தக்க நிலை இருதயத்தில் இருக்கும்வரை அந்த ஜெபம் மாய்மாலமானதாகவே இருக்கும். ஆகவே பரிசுத்த ஆவியானவர் இருதயத்திலிருக்கும் பாவத்தையும் அதன் விளைவாகிய பரிதபிக்கும் நிலையையும் சுட்டிக்காட்டி உணர்த்துவார். அவ்வாறு உணர்த்தப்படும்போது சரி செய்து கொண்டால், நம்முடைய ஜெபம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அங்கீகரிக்கக்கூடியதாக மாறும்.

விசுவாசத்தோடு ‘‘பிதாவே’’ என்று அழைக்கும் ஒரு வார்த்தை ஜெபத்தில் ஆயிரம் வார்த்தைகளை பயன்படுத்துவதைவிட மேன்மையானது. மறுபடியும் பிறந்த நிச்சயமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளாமல் தேவனை ‘‘பிதாவே’’ என்று அழைக்கத் துணியாதீர்கள்.

மனிதர்களால் தயாரித்து வைத்திருக்கும் ஜெப புத்தகங்கள் மூலம் நம்முடைய இருதயத்தை தேவனிடத்தில் உயர்த்த அல்லது ஆயத்தப்படுத்த முடியாது. அது நம்முடைய மகா பெரிய தேவனால் மாத்திரமே முடியும். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்திற்குள் வந்து ஆளுகை செய்து விண்ணப்பத்தின் ஆவியை நமக்குத் தந்தால் மட்டுமே தேவனோடு நம்முடைய ஆத்துமா நல்மனசாட்சியோடு இசைந்திருக்கும்.

உங்கள் ஜெபத்தில் அநேக வார்த்தைகளைக் கொட்டுவதால் அந்த ஜெபம் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. வார்த்தைகள் காரியமே அல்ல. உங்கள் இருதயம் ஜெபத்தில் மனப்பூர்வமாக, உண்மையாக இணைந்திருக்கிறதா என்பதுதான் முக்கியம்.

பரிசுத்த ஆவியின் உதவி இல்லாமல், ஜெபித்தால் நீங்கள் விரைவில் சோர்ந்து போவீர்கள். சோர்வை மறைத்து அதை வெளியே காட்டிக்கொள்ளாதபடி ஜெபித்தால் அது மாய்மாலமான ஜெபமாகும்.

ஜெபமின்றி விசுவாசம் காக்கப்படவே முடியாது. யூதா ‘‘நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிபடுத்திக் கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி.. இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்’’ (யூதா 20) என கூறுகிறார். ஆனால் சாத்தானும் அந்திக் கிறிஸ்துவும், பரிசுத்த ஆவி இல்லாமலே மேலோட்டமான ஒரு ஜீவியம் போதும் என்றும், மேலோட்டமான பிரசங்கத்தையும், கேட்கும் தன்மையையும், ஜெபத்தையும் கொடுத்து உலகத்தையே வஞ்சித்துக் கொண்டிருக்கின்றான். இவர்கள் ‘‘தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாயிருப்பார்கள்’’ (2 தீமோத்தேயு 3:5).

கருத்தோடு அல்லது அறிவோடு ஜெபிப்பது என்பது நாம் ஜெபிக்கிற காரியங்கள் தொடர்பாக நம்முடைய அறிவில் பரிசுத்த ஆவியின் அறிவுரையைப் பெற்றுக் கொண்டு ஜெபிப்பதாகும். தாவீது, ஆவிக்குரிய விவேகத்தின் மூலமாகத் தன்னைக்குறித்து தேவன் என்ன எண்ணங் கொண்டிருக்கிறார் என்பதை உணர முடிந்தது. பிரகாசிக்கப்பட்ட அறிவு அல்லது விவேகம், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஊன்றி, உரிமை பாராட்டி, ஜெபிக்க உற்சாகமூட்டும். வாக்குத்தத்தங்களில் உரிமை பாராட்டி ஜெபிக்கும்பொழுது ஜெபத்தில் பெலத்தின் மேல் பெலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் ஆவியோடும் ஜெபிக்க வேண்டியதாயிருக்கிறது, கருத்தோடும் ஜெபிக்கவேண்டியதாயிருக்கிறது. இதை முற்றும் தெளிவாக விளங்கிக்கொள்ளும் பொருட்டு நான் ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன். ஒருவேளை இரண்டு பிச்சைக்காரர்கள் உங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களில் ஒருவன் ஏழை, முடவன், காயம்பட்டவன், பட்டினி கிடப்பவன் என்பது அவனது தோற்றத்திலேயே அறிந்து கொள்ள முடிகிறது. மற்றவன், ஆரோக்கியமுள்ளவன். ஆனால், இச்சையுள்ள மனிதன். இருவருமே பிச்சை கேட்கும்பொழுது, ஒரே வகையான வார்த்தைகளையே உபயோகிக்கின்றனர். ஆனால் உண்மையில், ஏழையாக, முடவனாக, காயம்பட்டவன், உள்ளுணர்வோடு, தான் மிகுந்த தேவையிலிருக்கும் உணர்ச்சியோடு, மிகுந்த கருத்தோடு பிச்சை கேட்பான். அவனது துக்கமான புலம்புதல் பரிதாபத்திற்குரியது. ஆனால், ஆரோக்கியமான பிச்சைக்காரனிடம் வார்த்தைகளிருந்தாலும் அதில் உள்ளுணர்வு எதையும் காண முடியாது. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். இதே நிலைதான் நாம் தேவனோடு கேட்கும்போதும் ஏற்படுகிறது. சிலர் தாங்கள் கேட்க வேண்டுமே என்ற கடமைக்காக அல்லது மேலோட்டமாக ஜெபத்தில் கேட்கின்றனர். ஒருவனுடைய ஜெபம் அறிவிலிருந்து வந்த வார்த்தைகளாக மட்டுமிருக்கிறது. மற்றவருடைய ஜெபம் தனது ஆத்தும வேதனையால் உந்தப்பட்ட வார்த்தைகளால் நிரம்பிய ஜெபமாக இருக்கிறது. நிச்சயமாக இரண்டாவதாகச் சொல்லப்பட்ட மனிதனின் நிலையைப் பார்ப்பார். அவனுடைய ஜெபத்தைத் தேவன் கவனித்துக் கேட்பார்.

தெளிவாகத் தங்குதடையின்றிச் சரளமாக உங்களால் பேசமுடிவதில்லை என்பதை கர்த்தர் சிந்தையிலே எடுத்துக் கொள்வதில்லை. உங்களுடைய நொறுங்குண்ட இருதயத்தின் மீதுதான் அவருடைய பார்வையிருக்கிறது.